THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI
MOST REV. ALBERT G.A. ANASTHAS D.D., S.T.D.
Bishop of Kuzhithurai
: 04651 272077
: 9442451130
Bishop's House, Post Box No. 1, Unnamalaikadai - 629179, Kanyakumari District, Tamilnadu, India.

Ref. No: C/26: 2025 ஆகஸ்ட் 06, 2025

# சிறைப்பணி ஞாயிறு - ஆகஸ்ட் 17, 2025

ஆண்டவர் இயேசுவில் அன்பான சகோதர சகோதரிகளே,

காணாமல் போனவர்களைத் தேடி மீட்க வந்த நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமிருந்து உங்களுக்கு அருளும், இரக்கமும், அமைதியும், உண்டாவதாக!

சிறைப்பணி ஞாயிறை கொண்டாடும் இவ்வேளையில் "அனைவருக்கும் மீட்பு உண்டு" என்ற நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை கோட்பாட்டை நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டின் சிறைப்பணி ஞாயிறு கருப்பொருள் **"வீழ்ந்தோர் இறைவேண்டலால் எழுவர்"** என்பது ஆகும். கடவுளின் அருளாலும், திருஅவையின் ஆதரவுடனும் சிறைவாசிகள் மீண்டெழுவது இயலாத காரியம் அல்ல என்பதை இக்கருப்பொருள் நமக்கு நினைவூட்டுகிறது. கண்டனம் செய்வதில் விரைவும், மன்னிப்பதில் தாமதமும் காட்டும் இவ்வுலகில், நற்செய்தி, நம்மை ஓர் உயர்ந்த உண்மைக்கு அழைக்கிறது. ஒவ்வொரு மனிதனும் எவ்வளவுதான் தன் வாழ்வில் தவறுகள் செய்து தரம் தாழ்ந்திருந்தாலும், கடவுளின் பார்வையில் விலைமதிப்பற்றவர்களாகவே இருக்கின்றனர். ஆண்டவருடைய இரக்கமும், நம் இறைவேண்டலும் அவர்கள் மாற்றத்தை அடைய உதவிபுரியும்.

### மீட்பிற்கான அழைப்பு

படைப்பின் தொடக்கத்திலிருந்தே, பாவிகளிடம் கடவுளின் அசைக்க முடியாத அன்பைக் காண்கிறோம். ஆதாமும் ஏவாளும் வீழ்ந்திருந்தும் கைவிடப்படவில்லை. அரசர் தாவீது, கடுமையான பாவம் செய்த போதிலும், மனந்திரும்பி கடவுளின் இதயத்திற்கு ஏற்ற மனிதரானார். ஒரு காலத்தில் கிறிஸ்தவர்களை துன்புறுத்திய புனித பவுல், புறஇனத்தாரின் சீடரானார். காணாமல் போன மகன் கொண்டாடப்பட்டார். இவை வெறும் கடந்த காலக் கதைகள் மட்டும் அல்ல, மாறாக் இவை இறைதன்மை கொண்டவை, நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் தருபவையும் ஆகும். எசேக்கியேல் இறைவாக்கினர் மூலம் கடவுள் அறிவிக்கிறதுபோல், "தீயோர் சாகவேண்டுமென்பது என் விருப்பம் அன்று ஆனால், அத்தீயோர் தம் வழிகளினின்று திரும்பி, வாழ வேண்டும் என்பதே என் விருப்பம். ஆகவே உங்கள் தீய வழிகளினின்று திரும்புங்கள்" (எசேக்கியேல் 33:11).

### கிறிஸ்து இரக்கமுள்ளவர் மற்றும் மறுசீரமைப்பு செய்பவர்

தனது பொது வாழ்வில், இயேசு ஏழைகள், பாவிகள், வரி வசூலிப்பவர்கள் மற்றும் புறந்தள்ளப்பட்ட மக்களோடு நல்லுறவு வைத்திருந்தார். சிலுவையிலிருந்து, மனந்திரும்பிய ஒரு கள்வனிடம் "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்"(லூக் 23:43) என்னும் மன்னிப்பு வார்த்தைகளைப் பேசினார். வரி வசூலிப்பவர்களுடன் அவர் உணவருந்தினார்; விபச்சாரத்தில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட பெண்ணை மன்னித்தார். தொலைந்து போன நாணயம், காணாமற்போன ஆடு, இழந்து போன மகன் போன்ற உவமைகள் மூலம் அவர் தந்தையின் இதயத்தை வெளிப்படுத்தினார். "மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியைவிட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும்" (லூக் 15:7). காணாமற்போனதை தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார். (லூக்.19:10) என்று சொல்லி சமூகத்தால் புறந்தள்ளப்பட்டவர்களுக்கு புது நம்பிக்கைக் கொடுத்தார்.

### தண்டனைக்குப் பின்னால் நம்பிக்கை

திருத்தந்தை பிரான்சிஸ் ஒருமுறை சிறை சந்திப்பிற்கு பிறகு இவ்வாறு கூறினார், "ஆண்டவர் மறு ஒருங்கிணைப்பில் வல்லவர் அவர் நம் கையைப் பிடித்து மீண்டும் சமூகத்திற்குள் கொண்டு வருகிறார்."

THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI
MOST REV. ALBERT G.A. ANASTHAS D.D., S.T.D.
Bishop of Kuzhithurai
: 04651 272077
: 9442451130
Bishop's House, Post Box No. 1, Unnamalaikadai - 629179, Kanyakumari District, Tamilnadu, India.

சிறையில் அடைக்கப்பட்டவர்களுடனும், அவர்கள் குடும்பத்தினருடனும், அவர்களுக்கு சேவை செய்பவர்களுடனும் ஒன்றாக நடப்போம். நம் இதயங்கள் அகலத் திறக்கப்படட்டும் - அதனால் எவரும் விலக்கப்பட மாட்டார்கள். அனைவரும் கடவுளின் அன்பை அறியட்டும். இந்த சிறைப்பணி ஞாயிறு நம் தைரியத்தைப் புதுப்பிக்கட்டும். மறக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்யவும், குரலற்றவர்களுக்காக குரலெழுப்பவும், பூட்டிய கதவுகளுக்குப் பின்னால் நற்செய்தியை அறிவிக்கவும் இந்த ஞாயிறு நமக்கு அழைப்பு விடுக்கிறது. திருஅவை, கண்டனம் செய்வதற்கான நீதிமன்ற அறை அல்ல, மாறாக நலம் தரும் மருத்துவமனை. “நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்” (யோவான் 8:11) என்னும் கிறிஸ்துவின் வார்த்தைகளை வாழ்வில் எதிரொலிப்போம்.

தமிழகத்தில் 9 மத்திய சிறைச்சாலைகள், 5 பெண்கள் தனிச்சிறைச்சாலைகள், 10 மாவட்டச் சிறைச்சாலைகள், 3 திறந்தவெளி சிறைச்சாலைகள் மற்றும் கிளை சிறைச்சாலைகள் உட்பட 120 சிறைச்சாலைகளில் 22,631 சிறைவாசிகள் நமது ஆதரவுக்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். நம்முடைய மறைமாவட்டத்திலும் சிறைப்பணி தன்னார்வ தொண்டர்கள் சிறைவாசிகளின் குழந்தைகளுக்கு கல்வி உதவி, சிறைவாசிகளின் குடும்பங்களுக்கு பொருளாதார உதவி மற்றும் சிறைவாசிகளை ஆற்றுப்படுத்துதல் போன்ற பல நல்லப் பணிகளை செய்து வருகின்றனர். சிறைவாசிகளின் மனமாற்றத்திற்காகவும், அவர்களின் புதுவாழ்விற்காகவும், குடும்ப நலனுக்காகவும் நாம் தொடர்ந்து மன்றாடுவோம்.

**சிறைப்பணிக்காக நாம் செய்ய வேண்டியன:**

- ❖ மறைமாவட்டத்திலுள்ள சிறைப்பணி பணிக்குழுவில் சிறைவாசிகளுக்காக பணிபுரிய ஆர்வமாக உள்ளவர்கள், தன்னார்வத்தோடு தங்களை இப்பணிக்குழுவில் இணைத்து பணியாற்றுதல்.
- ❖ வருமுன் காப்பது சிறந்தது என்பதற்கிணங்க, சிறைப்பணி பணிக்குழு தொடர் முயற்சியாக “குற்றமில்லா குமரி” என்கின்ற முயற்சி மேற்கொண்டு ஒவ்வொரு பங்குகளிலும் உள்ள மறைக்கல்வி மன்றத்தினை சந்தித்து விழிப்புணர்வு பயிற்சி அளித்து வருகிறது. உங்கள் பங்குகளிலும் சிறைப்பணிக்குழுவை தொடர்பு கொண்டு இப்பயிற்சியை வழங்க உரியன செய்தல்.
- ❖ நம்முடைய பங்குத்தளத்தில் பங்கு மக்கள் எவரேனும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தால் அவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யலாம் என்கின்ற முன்னெடுப்பும், நம் மத்தியில் வாழ்கின்ற அவருடைய குடும்பத்தாருக்கு, நாம் இருக்கின்றோம் என்கின்ற, உடனிருப்பையும் கொடுத்தல்.
- ❖ மேலும் வருகின்ற ஞாயிறு திருப்பலி காணிக்கையினை இம்மாதமே ஆயர் இல்லத்தில் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

இறைமகன் இயேசு உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ A. Albert

MOST REV. ALBERT G.A. ANASTHAS
BISHOP OF KUZHITHURAI

மேதகு ஆயர் ஆல்பர்ட் G. A. அனஸ்தாஸ்,
குழித்துறை மறைமாவட்டம்.

குறிப்பு: இச்சுற்றுமடலை குழித்துறை மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளிலும், கிளைப் பங்குகளிலும் ஆகஸ்ட் 10, 2025 அன்று ஞாயிறு திருப்பலியில் மறையுரைக்குப் பதிலாக வாசிக்கவும்.

: albertgeo@gmail.com * rcdiocesekuzhithurai@gmail.com : www.kuzhithuraidiocese.com